

# மாய வலை

பா.ராகவன்

தமது மலேசிய ரசிகர் செய்த குறும்பு கலந்த கிரிமினல் நடவடிக்கைக்காகக் கடந்த வாரம் முழுவதும் நடிகர் சிவகுமார், படாதபாடு பட்ட செய்தியை பேப்பரில் படித்திருப்பீர்கள். ரசிகரையும் விட்டுக்கொடுக்காமல், பிரச்னையும் பெரிதாகாமல் தவிர்க்க, அவர் எத்தனை அவஸ்தைப்பட்டாரோ, அவருக்குத்தான் தெரியும்.

நேரடி உவமையாக இதனைச் சொல்லமுடியாது என்றாலும், கிட்டத்தட்ட இதேபோன்றதொரு தர்ம சங்கடத்தில்தான் ஒசாமா விஷயத்தில், அசன் அல் துராபி மாட்டிக்கொண்டார். சிவகுமாரின் மலேசிய ரசிகர், விளையாட்டாக போன் செய்ததுடன் விட்டுவிட்டார். ஒசாமாவை அந்த லிஸ்டில் சேர்க்கமுடியாதல்லவா? அவர் வாழ்க்கையில் விளையாட்டு என்பதே கிடையாது. எல்லாமே வினைதான்.

துராபி மாட்டிக்கொண்ட காண்டத்தைப் பார்ப்பதற்கு முன்னால், அதன் பின்னணி கலாட்டாக்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்தத் தொடரின் முதல் சில அத்தியாயங்களுக்குள்ளாகவே, நாம் பார்த்த ஏடன் துறைமுகத் தாக்குதல் திட்டத்தில் தொடங்குகிறது அது.

சூடானில் தனது தளத்தை மிக வலுவாக நிறுவி, ஏனைய இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்களுடன் நல்லுறவு வளர்த்துவிட்டு, கிட்டத்தட்ட அத்தனை மத்தியக் கிழக்கு தேச அரசுகளின் ரகசிய ஆதரவையும் பெற்று, அல் காயிதா ராட்சஸ பலம் அடைந்திருந்த நிலையில்தான், சோமாலியாவுக்கு அமெரிக்க ராணுவம் ஒரு மீட்புப் படைபோலப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. மீட்புப் படை என்று கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. உதவிப் படை. கப்பல் கப்பலாக சோமாலியப் பஞ்சத்துக்கு நிவாரணமாக உதவிப் பொருள்கள், மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு போனார்கள்.

இதனை யாராவது மருத்துவர்கள் அடங்கிய குழுக்களோ, சமூக நல அமைப்புகளோ செய்திருக்கலாம். அல்லது அவர்களை அமெரிக்க அரசே அனுப்பியிருக்கலாம். மாறாகத் தனது ராணுவத்தை, அமெரிக்கா அனுப்பியதுதான் சிக்கலாகிவிட்டது. அதுவும், பட்டாலியன் பட்டாலியனாக கப்பல் நிறைய ஆயுதங்களுடன் உதவி செய்யப்போகிறேன் என்றால், என்ன நினைக்கத் தோன்றும்?

அல் காயிதாவின் ஏடன் துறைமுகத் தாக்குதல் திட்டம், தோல்வியடைந்த கதையை ஏற்கெனவே பார்த்தோம். அதன் தொடர்ச்சியாகத்தான் ஒசாமா பின்லேடன், சோமாலிய மண்ணிலேயே அமெரிக்கப் படைகளை துவம்சம் செய்ய முடிவு செய்தார். அதுவும் எப்படி? சோமாலிய இளைஞர்களைக் கொண்டே தாக்குதல் நடத்தவேண்டும். எவ்வித நவீன ஆயுதங்களுடனும் பரிச்சயம் இல்லாத அவர்களைக் கொண்டே, அமெரிக்க ராணுவத்தினரைச் சின்னாபின்னப்படுத்தவேண்டும். எப்படி, யாரால், எங்கிருந்து இவர்களுக்கு ஆயுத பலமும் போர்த்தந்திரங்களும் வருகின்றன என்று, கண்டேபிடிக்க முடியாதபடி, அசுர வேகத்தில் தாக்குதல் ஆரம்பித்து முடித்துவிட வேண்டும். இதுதான் திட்டம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். எப்படி, எங்கிருந்து ஆரம்பிப்பது?

அப்போது ஒசாமாவின் மூத்த தளபதிகள் சிலரும் துராபியும்தான் அந்த ஆலோசனையை வழங்கினார்கள்.

சோமாலிய இளைஞர்களைக் கூட்டிவைத்துப் பயிற்சி அளிப்பது என்பது மிகப்பெரிய காரியம். அதனைச் சோமாலியாவில் செய்யமுடியாது. சோமாலியாவுக்கு வெளியே வேறெங்காவதுதான் செய்யவேண்டும். கண்டிப்பாக சூடானில் செய்யமுடியாது. அவர்களை சூடானுக்கு வரவழைத்தாலே, அமெரிக்க உளவுத்துறை மோப்பம் பிடித்துவிடும். ஒருத்தர், இரண்டு பேர் என்றால் சரி. சுமார் ஆயிரம் இரண்டாயிரம் பேரைக் கூப்பிட்டு வந்து சோறு போட்டுப் பயிற்சி அளித்து அனுப்புவது என்றால், மிகவும் கஷ்டம். ஆகவே, சோமாலியாவுக்கு வெகு தொலைவிலும் அல்லாமல், சோமாலியாவாகவும் அல்லாமல் ஓரிடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிரச்னையில்லாமலும் காரியம் நடக்க வேண்டும். எங்கே செய்யலாம்?

கென்யாவின் தலைநகரான நைரோபியை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். சோமாலியாவைப் போலவே அதிகம் பொருளாதார சௌகரியங்கள் ஏதுமில்லாத ஓர் ஏழை நாடு, கென்யா. அரசு அதிகாரிகளைக் கொஞ்சம் கவனித்தார்கள். நைரோபியிலேயே ஒதுக்குப்புறமாக ஓரிடம், சுமார் ஒரு வருடக் குத்தகைக்குக் கிடைத்தது. ஏற்கெனவே, அங்கிருந்த அல் காயிதாவின் கிளையை உசுப்பிவிட்டார்கள். சோமாலியாவிலிருந்தும் ஜோர்டனிலிருந்தும் அல் காயிதாவின் மூத்த தளபதிகள் சிலர், நைரோபிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். சிரியா, பாலஸ்தீன் ஆகிய தேசங்களைச் சேர்ந்த வேறு சில போராளிக் குழு தளபதிகளும் சிறப்புப் பயிற்சியாளர்களாக அழைக்கப்பட்டார்கள்.

அடுத்தபடியாக, சோமாலிய இளைஞர்களைத் திரட்டி வருவதற்காக, ஒரு குழு ரகசியமாக அந்நாட்டுக்குப் போனது. பொதுவாக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்காக, சோமாலியர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு லாரியில் போவது வழக்கம். ஒரு மாதம், மூன்று மாதம், ஆறுமாதம் என்று கட்டுமானப் பணிகளுக்காக, அவர்களை அழைத்துப்போய் குறைந்த கூலியில் வேலை கொடுத்து அனுப்புவது, ஏனைய ஆப்பிரிக்க நாடுகளில் எப்போதும் உள்ள வழக்கம்தான். பைசாவையே கண்ணில் பார்க்காத மக்களுக்குக் கொடுக்கிற கூலி குறைவாக இருந்தால் என்ன? அதிகமாக இருந்தால் என்ன? சந்தோஷமாகப் புறப்பட்டு வந்துவிடுவார்கள்.

அந்த மாதிரியான பாவனையில்தான், அல் காயிதாவின் போராளிகள் முதலில் சோமாலியாவுக்குப் போனார்கள். அங்குள்ள இளைஞர்களைச் சந்தித்துப் பேசி, முஸ்லிம் தேசமான சோமாலியாவுக்குள் கிறிஸ்துவ அமெரிக்கப் படைகள் வந்திருப்பது, நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அல்ல; மாறாக, சோமாலியாவையே அடிமைப்படுத்துவதற்காகத்தான் என்று தொடர்ந்து பேசிப்பேசி, மூளைச் சலவை செய்தார்கள். இல்லாவிட்டால், ராணுவம் ஏன் வருகிறது என்று கேட்டு, அவர்களையும் கொதிப்படையச் செய்தார்கள்.

கிட்டத்தட்ட மூன்று மாதகாலம் இந்த வேலை நடந்தது. சுமார் ஆயிரத்து எண்ணூறு இளைஞர்கள், சோமாலிய மண்ணில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிடத் தயார் என்று அறிவித்தார்கள். அவர்களைச் சல்லடை போட்டுச் சலித்து ஆயிரத்து நூறு பேரை மட்டும் தேர்வு செய்து, கென்யாவுக்கு அழைத்துச் சென்றது அல் காயிதா.

பயிற்சிகள் ஆரம்பமாயின. முதலில் ஆயுதங்களுடனான பரிச்சயம். துப்பாக்கிகளை எப்படித் தூக்குவது? எப்படிக் கையாள்வது என்று பாலபாடம் ஆரம்பித்தார்கள். உணவின்றி, உடல் நலமின்றி இருந்த சோமாலிய இளைஞர்கள் பலருக்கு, கனரக ஆயுதங்களைத் தூக்குவதே முதலில் கஷ்டமாக இருந்தது. அவர்களுக்கு வேண்டிய சத்துணவுகள், மருந்துகள் அளித்து, முதலில் உடம்பைத் தேற்றி, உடற்பயிற்சிகள் செய்ய வற்புறுத்திக் கொஞ்சம் பலம் சேர்த்தார்கள். அதன்பின் போர்ப் பயிற்சிகள் ஆரம்பமாயின.

கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் நடந்தன இந்தப் பயிற்சிகள். கல்வியறிவோ, முறையான போர்ப் பயிற்சியோ இல்லாதுபோனாலும், சொல்லிக்கொடுப்பதை அப்படியே பிடித்துக்கொள்ளும் திறமை அந்த இளைஞர்களிடம் இருந்தது. குறிபார்த்துச் சுடுவதில் அவர்கள் ஒசாமா பின்லேடனையே வியப்பில் ஆழ்த்தும் அளவுக்குத் தேறினார்கள். கொஞ்சம் காட்டுத்தனமான தாக்குதல் உத்திகள்தான் அவர்களுக்குச் சரிப்பட்டது. ஆகவே, முறையான போர்ப்பயிற்சிகளைக் காட்டிலும் கெரில்லாத் தாக்குதல் முறைகள் அதிகம் கற்றுத்தரப்பட்டன.

ஓரளவு அவர்கள் பயிற்சியில் தேறிவிட்டார்கள் என்பது உறுதியானதும், உரிய ஆயுதங்களைக் கொடுத்து அவர்களை ஒரு முகூர்த்த வேளை பார்த்து, சோமாலியாவுக்கு அனுப்பிவைத்தது அல் காயிதா.

'எதற்காகவும் காத்திருக்காதீர்கள். ஒரு போதும் அச்சப்படாதீர்கள். போய் இறங்கியதுமே அடிக்க ஆரம்பித்துவிடுங்கள். நீங்கள் கவனமாக இருக்க வேண்டிய ஒரே விஷயம், நீங்கள் எங்கே இருந்து தாக்குகிறீர்கள் என்பது மட்டும் அமெரிக்கர்களுக்குத் தெரியவே கூடாது.'

– இதுதான் அல் காயிதா அவர்களுக்குச் சொன்ன அதிமுக்கியமான அறிவுரை. கெரில்லாத் தாக்குதலின் அடிப்படையே இதுதான். தாக்குதல் நடத்துபவர்கள் பதுங்கியிருக்கும் இடம் கண்டிப்பாக எதிரிக்குத் தெரியக்கூடாது.

சோமாலியாவில் பாலைவனங்கள் அதிகம். மலை மாதிரி மணல் மேடுகள் சகட்டுமேனிக்கு இருக்கும். சும்மா வானம் பார்த்துப் படுத்துக்கொண்டு மண்ணை வாரி மேலே போட்டுக்கொண்டாலே கண்டுபிடிப்பது கஷ்டம். அப்படியிருந்தும், அந்த இளைஞர்கள் கவனமாகப் பாலைவனப் பகுதிகளில், தங்களுக்கான ரகசியப் பதுங்கு குழிகளை ஒழுங்காக அமைத்துக்கொண்ட பிறகுதான் யுத்தத்தை ஆரம்பித்தார்கள்.

அதுவரை சோமாலியாவில் தங்களுக்கு எதிராக ஒரு தாக்குதல் நடக்கக் கூடும் என்பது குறித்தே சிந்தித்திராத அமெரிக்க ராணுவம், துப்பாக்கிகளையே தூக்காமல் சமூக சேவை செய்வதில் குறியாக இருந்தது. திடீரென்று இந்த இளைஞர்கள், அமெரிக்க முகாம்களைக் குறிவைத்துத் தாக்குதல் நிகழ்த்தத் தொடங்கியதும் முதலில் வெலவெலத்துப் போய்விட்டார்கள். சுதாரித்துக் கொள்வதற்குள், ஏராளமான ஆயுதங்கள் களவாடப்பட்டுவிட்டன.

அல் காயிதா சந்தோஷப்பட்டது. அமெரிக்கா பதிலடி தரத் தயாரானபோது சோமாலியர்கள், மிக உக்கிரமான கெரில்லாத் தாக்குதல்களில் இறங்கிவிட்டார்கள். இரவு வேளைகளில் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாது. வெயில் சுட்டெரிக்கும் பகல் பொழுதுகளில், அமெரிக்க ராணுவத்தினர் பெரிய பெரிய கண்டெய்னர் வண்டிகளுக்குள்ளே ஏர் கூலர் வைத்துக்கொண்டு, வெயிலுக்குப் பதுங்கியிருக்கும் வேளை பார்த்து, கையெறி குண்டுகளை வீச ஆரம்பிப்பார்கள். நிறுத்தாமல் பல ரவுண்டுகள் சுட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பதில் தாக்குதலுக்கு அமெரிக்கர்கள் வெளியே வந்தால், அவர்களால் சோமாலிய வெயிலைச் சில மணிநேரங்களுக்கு மேல் தாங்கமுடியாது. அந்த முதல் சில மணிநேரங்கள் மட்டும் சோமாலியர்கள் காணாமல் போய்விடுவார்கள். அமெரிக்கப் படை தேடி அலுத்து, சோர்வுடன் திரும்பும் வேளையில் மீண்டும் தாக்குதல் தொடங்கும்.

1993 அக்டோபர் மாதம் சோமாலியாவில், கடும் குளிர் வீசத் தொடங்கியது. அமெரிக்கர்களாலேயே தாக்குப்பிடிக்க முடியாத பேய்க்குளிர் அது. அந்தச் சமயத்தில், சோமாலியர்கள் தங்கள் தாக்குதலை இரவுப் பொழுதுக்கு மாற்றிக்கொண்டார்கள். பனிக்கரடிகள் கூட வெளியே வரத் தயங்கும் குளிர்ப்பொழுதில், அவர்கள் மிக உக்கிரமாக கெரில்லாத் தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். யாராலுமே வீழ்த்த முடியாத அமெரிக்க விமானப்படை ஹெலிகாப்டர்கள் இரண்டை, அவர்கள் வெகு அநாயாசமாகச் சுட்டு வீழ்த்தியிருந்தார்கள். நூற்றுக்கணக்கான

அமெரிக்க வீரர்களைக் கொன்றும் இருந்தார்கள். ஏராளமான சேதம் மற்றும் ரத்தம். நிலைகுலைந்துவிட்டது அமெரிக்க ராணுவம். எத்தனையோ உத்திகளைக் கையாண்டு, அவர்களை ஒடுக்கப் பார்த்தும் முடியவில்லை.

அப்போதுதான், அமெரிக்கா விழித்துக்கொண்டு அல் காயிதாவை கவனிக்கத் தொடங்கியது. சோமாலியப் படைக்கு உதவி செய்ய, மூன்று அல் காயிதா கமாண்டர்களும் சோமாலியாவுக்குள் வந்திருந்தார்கள். அவர்கள் திட்டமிட்டுத் தர, சோமாலிய இளைஞர்கள் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தார்கள். மறுபுறம் நைரோபியிலிருந்து தீரத் தீர ஆயுதங்களும் வெடிமருந்துகளும் ரகசிய வழிகளில் அனுப்பப்பட்டுக்கொண்டே இருந்தன.

இனி தாக்குப்பிடிக்கவே முடியாது என்று முடிவு செய்து, 1994-ம் ஆண்டுத் தொடக்கத்தில் அமெரிக்கா, சோமாலியாவிலிருந்து முற்றிலுமாகத் தனது படைகளை விலக்கிக் கொண்டுவிட்டது. சோமாலியாவிலிருந்து படைகளை விலக்கிய அதே கணத்தில், தனது பார்வையை மிகத் தீவிரமாக அல் காயிதாவின் பக்கம் செலுத்தத் தொடங்கியது.

அதுநாள் வரை தனது புகழ்பெற்ற உளவு அமைப்பான சி.ஐ.ஏ., வெறுமனே லாலிபாப் சாப்பிட்டுக்கொண்டிருந்ததை எண்ணி, தலையில் அடித்துக்கொண்டது. ஆப்கனிஸ்தானில் ஒசாமா இல்லை; வேறெங்கோ போயிருக்கிறார் என்பது மட்டுமே தெரிந்திருந்த அமெரிக்காவுக்கு, ஒசாமா சூடானில்தான் இத்தனை ஆண்டுகளாக உட்கார்ந்துகொண்டு வேலை பார்த்திருக்கிறார் என்கிற செய்தி மிகத் தாமதமாகவே தெரியவந்தது.

ஒரு வகையில் இதனைக் குற்றம் சொல்லவும் முடியாது. இன்றைக்கு இருக்கிற அளவுக்கு, அப்போது ஒசாமா ஒன்றும் அத்தனை மோசமான தீவிரவாதியாக அடையாளம் காணப்படவில்லை. தாக்குதல்களுக்கான ஆயத்தங்களில்தான் அவர் ஈடுபட்டிருந்தாரே தவிர, பெயர் சொல்வது போலப் பெரிய தாக்குதல்கள் ஏதும் அதுவரை நடைபெற்றிருக்கவில்லை. தவிரவும், அமெரிக்காவின் மீது அவர் கொண்டுள்ள கோபம் எப்படிப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிகிற அளவுக்கு, அறிக்கைகள் ஏதும் கூட வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதனால், சி.ஐ.ஏ. அவரையும் அல் காயிதாவையும் அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் இருந்தது வியப்புக்குரிய விஷயமல்ல. ஆனால், மேற்படி சோமாலிய சம்பவமும் அது நடந்து கொண்டிருக்கும் காலத்திலேயே திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேறிய 1993 அமெரிக்க உலக வர்த்தக மைய முதல் தாக்குதல் (2001 தாக்குதலுக்கு முன்பு) நடவடிக்கையும் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை மணி அடித்துவிட்டன.

சோமாலியத் தோல்வியைக்கூட அமெரிக்கா ஜீரணித்திருக்கும். ஆனால், தனது சொந்த மண்ணிலேயே நிகழ்த்தப்பட்ட அந்தக் கோரத் தாக்குதல் அவர்களைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.